தொகுதி-௫௫ Vol. 55

பகுதி-௩ No. 3

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1990
விகாரி-ஆனி
June-1959

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. வடசொல்லின்றித் தமிழ் வாழாதா?
(பேராசிரியர் அ. கி. பரந்தாமனர் M. A.) 61

2. அந்தாதியிலக்கியம்
பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் 69

3. வேற்றுமையா? வினையெச்சமா?
மா. இளையபெருமாள் M. A. M. Litt. 73

4. உலகச் சமயங்கள்
கி. பழநியப்பன் 77

5. நாடகத் தமிழ்ச் சொற்கள், க
வினயம்
சங்கீத வித்துவான் ப. சுந்தரேசன் 85

6. சங்கச் செய்திகள் 92

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A, (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை,
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனர் M. A. M. O. L. L. T. Ph. D, தமிழ்த்துறைத் தலைவர் தியாகராசர் கல்லூரி, மதுரை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து, M. A. B, D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், தலைவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம்–மதுரை.
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

3582

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ருரு Vol. 55	திருவள்ளுவர் ஆண்டு 1990 விகாரி—ஆனி 1959—June	பகுதி ந No. 3.

வடசொல்லின்றித் தமிழ் வாழாதா?

[அ. கி. பரந்தாமனார் M. A.,]

(*தமிழ்ப்பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.*)

வடமொழி ஆரிய இனத்துக்குத் தாய்மொழி; வளமான இலக்கிய இலக்கண தத்துவக் கலைச்செல்வங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் செல்வமொழி; ஒரு காலத்தில் இந்திய நாட்டில் சமயச் சார்பில் இந்து மதத்திற்கு அனைத்திந்திய மொழியாய் இருந்த மொழி வடமொழித் திருமறைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் புகழ்பெற்ற மாக்சு முல்லர் உலகிலே மிகவும் வியக்கத்தக்கதாயும் செப்பம் செய்யப்பட்டதாயும் மிகமிக உயர்ந்ததாயும் இலங்குவது வடமொழி என்று பாராட்டியுள்ளார். வடமொழி சிறந்த மொழி என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. தமிழறிஞர்களுக்கு வடமொழிமீது பொறாமை இல்லை. அது வடநாட்டினர்க்கோ பார்ப்பனர்க்கோ உரிய மொழியும் அன்று: எல்லாருக்கும் உரியமொழிதான். தமிழறிஞர் சிலர் முற்காலத்தில் இருமொழிகளையும் கற்றுப் போற்றினர்; இருமொழிகளையும் இருகண்களாகப் பாராட்டினர். மொழியியல் அறியாத வடமொழி வாணர் சிலர் தமிழ்மொழிக்குத் தாய்மொழி வடமொழி என்றும், வடசொல் துணையின்றித் தமிழ் இயங்காது

என்றும், தமிழ்ச் சொற்களையும் வடசொற்கள் என்றும் பேசியும், எழுதியும் வந்ததனால், தமிழறிஞர்கள் வடமொழியை வெறுக்கத் தொடங்கினார்கள்.

தமிழ்மொழி வடமொழியினின்று பிறந்தமொழியன்று; தென்னகத்தில் தோன்றி வளர்ந்த தொன்மொழி; வடமொழிக்கும் முந்தித் தோன்றிய உயர்தனிச் செம்மொழி; தென்னாட்டில் உலவிவரும் திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி; தொல்காப்பியம் போன்ற உயர்ந்த இலக்கணத்தைக் கொண்டுள்ள பெருமொழி; உலகம் புகழும் திருக்குறளைத் தந்த சிறந்தமொழி: அன்றும் பேச்சு மொழியாக இருந்தமொழி; இன்றும் பேச்சு மொழியாக நின்று விளங்கும் மொழி; காலத்துக்கு ஏற்றவாறு வளருந் தன்மைவாய்ந்தமொழி. இத்தகைய தமிழ்மொழியை, உயர்தனிச் செம்மொழியை, அமிழ்தினும் இனிய தமிழ்மொழியை வடமொழியினின்று பிறந்ததென்றால் எப்படி மனம் பொறுப்பர்? பொறுக்க முடியுமா?

வடமொழியும் தமிழ்மொழியும் தமிழகத்தில் இயங்கிவந்தன. தமிழறிஞர்கள் இருமொழிகளையும் கற்றார்கள். வடசொற்கள் தமிழ்மொழியில் புகுந்தன. வடசொற்கள் தமிழில் புகுந்ததை வரலாற்று முறையிலும் அறிவியல் முறையிலும் ஆராய்ந்து பார்ப்போம்.

ஆரியர்கள் வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டில் புகுந்து குடியேறி நெடுங்காலமானபின்னரே தென்மொழியில் வடசொற்கள் சிறிது சிறிதாகப் புகுந்தன. இவ்வாரியர்கள் எப்பொழுது தமிழகத்தில் புகுந்தார்கள் என்பது குறித்துச் சிறிது வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. வடமொழி வல்லுநரும் ஆராய்ச்சிப் பேராசிரியருமாக விளங்கிய R. S. பந்தர்க்கர் தமது தக்காணத்து முன்னைய வரலாறு என்னும் நூலில் ஆரியர்கள் கி. மு. 7–ஆம் நூற்றாண்டில் தென்னகத்தில் நுழைந்துவிட்டார்கள் என்றும் அவர்கள் கி. மு. 350க்குள் தஞ்சை, மதுரை வரையிலும்

பரவித் தமிழர்களோடு பரவி விட்டார்கள் என்றும், அப்படி ஆரியர்கள்புகுவதற்கு முன்னரே சீரிய அமைப்புக்கொண்ட அரசுகளும், உயர்ந்த நாகரிகம் மிக்க மக்களும் தென்னிந்தியாவில் இருந்தார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். வரலாற்றுப் பேராசிரியர் K. A. நீலகண்ட சாத்திரியார் தமது தென்னிந்திய வரலாறு என்னும் நூலில் ஆரியர்கள் தமிழகத்தில் நுழைந்தது கி. மு. 1000ல் தொடங்கிக் கி. பி. 4–ஆம் நூற்றாண்டில் முடிந்திருக்க வேண்டும் என்பர். பின்னவர் கருத்தை ஏற்றுக்கொண்டால் ஆரியர்கள் இற்றைக்கு ஏறக்குறைய 3000ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் குடியேறி விட்டார்கள் என்று கொள்ள இடந்தருகிறது. பண்டைத் தண்டமிழ் இலக்கணத்திலும் சங்க இலக்கியங்களிலும் ஆரியர் கருத்துக்களும் பழக்க வழக்கங்களும் சாதி முறைகளும் புகுந்திருப்பதைக் காணும்போது மேற்குறித்த உண்மை புலனாகாமல் இல்லை. முதல் ஆரியக்குழு சங்க காலத்திற்கு முன்னமே அகத்தியர் தலைமையில் தமிழகத்தில் குடியேறி விட்டது. அகத்தியர் கதை இதைத்தான் அறிவிக்கிறது. கி. மு. 4–ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கூறப்படும் தொல்காப்பியத்திலும் தமிழொலிக்கு ஏற்றவாறு வடசொற்களை மாற்றியமைக்குமாறு விதி அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அந்நூற்பா இது:

"வடசொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே."

தொல்காப்பியரே வடசொற்களைத் தமிழ்மொழிக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துத் தமிழில் வழங்க இடம் தந்தார். ஆனால், அவர் வடசொல் நுழைப்பில் விழிப்பாகவே இருந்திருக்கிறார் என்பது தெரிகிறது.

பண்டைத் தமிழ்க் கவிஞர்களும் தமிழ்ப்பாக்களில் வடசொற்களைப் புகுத்தி எழுதுவதில் மிகமிக விழிப்பாகவே இருந்து வந்தார்கள். சங்க இலக்கியத்தில் 100–க்கு 2 வடசொற்களே உள்ளன. பதினெண்கீழ்க் கணக்கிலும் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் 100–க்கு 4 சொற்களே பெருகியிருக்கின்றன.

கி. பி. 9-ஆம் நூற்றாண்டுவரையுள்ள காலப்பரப்பில் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய பாடல்களில் 100-க்கு 15 அளவு வடசொற்களே புகுந்தன. மக்களுக்காகப் பாடிய மக்கட் கவிஞர்களான நாயன்மார்களும் ஆழ்வார்களும் வடசொற்களைத் தமிழில் புகுத்துவதில் விழிப்பாகவே இருந்திருக்கிறார்கள் எனலாம். கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் வடசொற்களையும் தமிழ்ச்சொற்களையும் கலந்தெழுதும் மணிப்பிரவாள நடை தமிழில் சமணர்களால் புகுத்தப்பட்டது. இம்மணிப்பிரவாளநடையால் வடசொற்கள் நிரம்பத் தமிழில் நுழையலாயின. ஸ்ரீபுராணத்திலிருந்து எடுக்கப்பட்டது கீழ்வரும் மணிப்பிரவாள நடை:

"மற்றொருநாள் சிரேணிக மகராஜன் ஸமவசரணடைந்து அசோக வனத்துள் அசோக விருக்ஷமூலத்து ரூபயௌவன ஸமவசரணடைந்து ஸகிதராகியத் தியான ரூபராகியிருந்த ஜீவாந்தர முனிகளைக்கண்டு அத்தியந்தம விஸ்மிதனாகி சுதருமகணதரரையடைந்து, 'பகவானே, ஈதிருசலக்ஷணசகிதராகிய இத்தபோதனர் யார்?' என்று வினவ அவரும் அருளிச் செய்வார்."

புராண காலங்களிலோ வடசொற்கள் அளவுகடந்து தமிழில் நுழைந்துவிட்டன. சமய நூல்களும் வேதாந்த சித்தாந்த விசிஷ்டாத்துவைத நூல்களும் எழுதப்பட்ட கி.பி. 12, 13-வது நூற்றாண்டுகளில் வரையறையில்லாமல் வடசொற்கள் தமிழ் மொழியில் புகுந்தன. கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வில்லிபுத்தூராழ்வாரும் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் இருந்த அருணகிரிநாதரும் வட சொற்களைத் தமிழ்ப்பாடல்களில் மிக மிகப் புகுத்திவிட்டார்கள். வில்லிபுத்தூரார் பாடிய பாடல்களுள் ஒன்று இது;

"நாலு சாப நிலையும் வல்ல நரனும் வீம நகுலனும்
நாலு பாக மான சேனை நாதனும்சி ரங்களா
நாலு கூறு செய்து தானும் நரனு மூந்த நடவினன்
நாலு வேத முடிவி னுக்கும் ஆதியான நாரணன்.

அருணகிரி நாதர் பாடிய திருப்புகழிலுள்ளவை கீழ் வரும் அடிகள்:

'குமர குருபர முருக சரவண
குகசண் முககரி பிறகாண
குழக சிவசுத சிவய நமவென
குரவ னருள்குரு மணியே என்''

இப்பாடல்களைப் பார்த்தால் இவ்விருவம் எப்படிக் கூசாமல் வடசொற்களைப் பெய்து தங்கள் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள் என்று காணலாம். இவர்கள் என்ன செய்வார்கள்? இவர்களைக் குறை கூறுவதில் பயனில்லை. இவர்களது காலநிலை அது. காலத்துக்கு இரையான கவிமன்னர்கள் இவர்கள் எனலாம். இக்காலத்தில் தமிழ்ப்பாக்கள் வடமொழி மயமாகத் தோன்றின.

கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் வீரராசேந்திரன் காலத்தில் அம் மன்னன் பெயரால் வீரசோழியம் என்ற இலக்கணம் தோன்றியது. புத்தமித்திரர் என்பவர் இதை இயற்றினார். பெருந்தேவனார் இதற்கு உரை இயற்றினார். இதில் வடமொழி இலக்கணங்கள் பல புகுந்தன. இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1433—50) காலத்தில் தண்டி என்பவர் வடமொழி தண்டியலங்காரத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார். இந்நூலால் வடமொழி அணியிலக்கணம் தமிழில் புகுத்தப்பட்டது. (கி. பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நன்னூல் சிறிதளவு வடமொழியைப் பின்பற்றித் தோன்றியது. வடமொழியும் தென்மொழியும் நிலைகண்டுணர்ந்த சேனாவரையர் (கி. பி. 14-ஆம் நூற்றாண்டு) மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி. பி. 1268—1311) காலத்தவர். இவர் வடமொழியைப் பின்பற்றித் தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு உரையெழுதினார். கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த பரிமேலழகர் வடமொழியைத் தழுவித் திருக்குறளுக்கு உரை இயற்றினார்.

இந்நிலையைக்கண்ட ஈசானதேசிகர் (கி. பி. 18-ஆம் நூற்றாண்டு) பிறழ உணர்ந்து தமிழைப்பற்றித் தவறாக எழுதினார். வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் தமது தமிழ்மொழியின்

வரலாறு என்னும் நூலில் ஈசானதேசிகர் கூறியதைக் கண்டித்துச் சொல்லும் முறையில், "இவை யனைத்தும் (ஈசான தேசிகர் இலக்கணக் கொத்தில் கூறியவையனைத்தும்) பாஷை நூல் என்னும் ஆரிய சாஸ்திரத்தின் பயிற்சியும் சரித்திரக் கண்ணும் இல்லாத குறைவினுல் எழுந்த பொருந்தாக் கூற்றுக்களாம் என்பது திண்ணம். இவை கேட்டுப் பேரறிவாளராயினுர் நகைத்து விடுப்பர் என்பது நிச்சயம்'' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

சிலர் தமிழ் மொழியைக் குறித்துப் பிறழ உணருமாறு வடசொற்கள் நாளடைவில் தமிழ்மொழியில் புகுந்துவிட்டன. இங்ஙனம் தமிழில் புகுந்த வடசொற்கள் கீழ்வருமாறு;

(1) பிராகிருதம் பேசும் வடநாட்டு மக்களுடன் நேரே பேசிப் பழகிய தமிழ் மக்கள் கடன் வாங்கின சொற்கள் தமிழில் உள்ளன.

(2) வடமொழி கற்ற வடநாட்டு அறிஞர்களால் தமிழ் நூலில் புகுந்த வடசொற்கள் இருக்கின்றன.

(3) வடமொழி கற்ற தமிழறிஞர்கள் தமிழ் மொழியில் புகுத்திய வடசொற்கள் உண்டு.

(4) மணிப்பிரவாளம் என்னும் மொழிநடையால் வலிந்து புகுத்தப்பட்ட வடசொற்கள் தமிழில் உள.

(5) தமிழ்ச் சொற்களாக உள்ளனவற்றை வடசொற்களாகக் கூறப்படுவனவும் உண்டு. உலகம், காலம், முத்து, நீர், மீன், குடி, ஆணி என்பவை இவை. உலர்ந்தது உலகம். காலால் (பருவக்காற்றால்) தோன்றுவது காலம். முதிர்ந்தது முத்து. நீர்மையுடையது நீர். மின்னுவது மீன். குடியிருப்பது குடி. அணுகுவது ஆணி.

ஈசானதேசிகர், "ஒன்றேயாயினும் தனித்தமிழ் உண்டோ?" என்ருர். இது முற்றும் தவருனது. கால்டுவெல் 60 தமிழ் முதன்மைச் சொற்களை எடுத்துக்காட்டி அவற்றிற்கு நேரான வடசொற்களையும் குறிப்பிட்டிருக்கிருர்.

தமிழ்	வடசொல்	தமிழ்	வடசொல்
1 அப்பன்	பித்ரு	31 பூனை	விடால
2 ஆய்	மாத்ரு	32 கடுவாய்	வ்யாகர
3 மகன்	ஸூனு	33 மான்	ம்ருக
4 மகள்	துஹித்ரு	34 குரங்கு	கபி
5 தலை	சிரஸ்	35 கரடி	ச்ருக்ஷ
6 கண்	அக்ஷி	36 பன்றி	ஸூகர
7 செவி	கர்ண	37 பாம்பு	ஸர்ப
8 வாய்	முக	38 பறவை	வயஸ்
9 பல்	தந்தம்	39 கரு	கால
10 மயிர்	கேச	40 வெள்	சுக்ல
11 கை	ஹஸ்த, கர	41 செந்நீர்	ரக்த
12 கால்	பாத	42 பெரு	மஹத்
13 ஞாயிறு	ஸூர்ய	43 சிறு	அல்ப
14 திங்கள்	சந்த்ர	44 இன் (சுவை)	மதுர
15 வான்	திவ்	45 புளி	அம்பல
16 நாள்	திவஸ	46 உப்பு	லவண
17 இரவு	நக்	47 தின்	பக்ஷ
18 தீ	அக்னி	48 குடி	பா
19 நீர்	அப், நீர	49 வா	ஏ
20 மீன்	மத்ஸ்ய, மீன	50 போ	கம்
21 மலை	பர்வத	51 நில்	ஸ்த்ர
22 மரம்	த்ருமு	52 இரு	ஆஸ்
23 கல்	அச்மன்	53 ஏகு	சர்
24 இல்	வேச்மன	54 ஓடு	த்ரு
25 ஊர்	க்ராம	55 உறங்கு	ஸ்வப்
26 ஆனை	ஹஸ்தின்	56 கேள்	ச்ரு
27 குதிரை	அச்வ	57 சொல்	வத
28 ஆ	கோ	58 நகை	ஹஸ்
29 எருமை	மஹிஷ	59 அழு	ருத்
30 நாய்	ச்வன	60 கொல்	ஹல்

மேலே கூறப்பட்டவை யனைத்தும் அடிப்படைத் தூய தமிழ்ச் சொற்கள். இன்னும் எத்தனையோ தூய தமிழ்ச்சொற்கள் உண்டு. கோன், தலைவன், நாடு, கோட்டம், கடவுள், கோவில், கல்வி. ஏடு, சுவடி, அறிஞர், சிற்றூர், படகு, குடை,

மரம், கப்பல், ஏர், உழவு, போர், வில், அம்பு, ஈட்டி, வாள், வில், வேல். நூற்றல், நெய்தல், அரிசி, மட்பாண்டம், வனைதல், நெய், சோறு முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவையெல்லாம் பழந்தமிழரது நிலேத்த நாகரிக வாழ்வைக் குறிப்பவை. இவற்றை யெல்லாம் நோக்கும்போது 'ஒன்றேயாயினும் தனித்தமிழ் உண்டோ?' என்று கூறியது இமயப் பெருந்தவறு என்று சொல்லவும் வேண்டுமோ?

ஈசானதேசிகர் மட்டும் தமிழ்மொழியைக்குறித்துத் தவருக உணரவில்லை; ஐரோப்பிய அறிஞர்கள் சிலரும் பிறழ உணர்ந்து தவருக எழுதினர்கள். சில சொற்கள் வடமொழியிலும் காணப் படும். ஒரே ஒலியமைப்பைக் கண்டு தமிழ்ச்சொல்லை வட சொல் என்று கூறிவிடுதல் முடியாது. எய்ட் (Eight) என்னுஞ் சொல்லைக்கண்டு தமிழ்ச்சொல்லாகிய எட்டு என்பது தான் 'எய்ட்' என்ருயிற்று எனச் சொல்ல முடியுமா? பிரைசு (Prize) என்னும் சொல்லைப் பரிசு என்னுஞ் சொல்லிலிருந்து பிறந்தது என்று கூறமுடியுமா? ஈன் (yean) என்னும் ஆங்கிலச்சொல் ஈன் (ஈன்ருள், ஈன்றது) என்னும் தமிழ்ச்சொல்லிலிருந்து தோன்றியது எனக் குறிப்பிடலாமா? உருள் என்னும் சொல்லும் சிவு 'என்னும் தமிழ்ச்சொல்லும் முறையே ரோல் (Roll) என்றும் சேவ் (Shave) என்றும் மருவின என்று கூறலாமா? இவ்வாறே மீனம் என்னுஞ் சொல் மீன் என்றும், நீரம் என்னுஞ் சொல் நீர் என்றும், முக்தி என்னுஞ் சொல் முத்து என்றும் ஆயின எனக் கூறுதல் முடியாது. இங்ஙனம் கூறுவதும் தவருகும். முத்து என்பது தூய தமிழ்ச் சொல். ஆரியர்களுக்கு முத்துத் தெரியாது. அவர்கள் வாழ்ந்த இடம் கடல் இல்லாதது. தமிழ்நாட்டின் தென்கோடியிற்ருன் முத்து எடுத்தார்கள். எனவே முக்தி என்னும் சொல்லிலிருந்து முத்துப் பிறந்தது என்பது வரலாற்று முறையில் பார்க்கும்போது தவறென்று வெள்ளிடைமலையென விளங்கும்.

(தொடரும்)

அந்தாதியிலக்கியம்

(பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர், தக்கலை)

(34-ஆம் பக்கத்தொடர்ச்சி)

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி திருப்பதிகள் பொருளாக வந்தது. திருவாய்மொழி நூற்றந்தாதி நூல் பொருளாக வந்தது. பிற்காலத்து இயற்றப்பெற்ற மருத்துவ நூல்கள் (சித்த வைத்திய நூல்கள்) பெரும்பாலும் அந்தாதித்துப் பாடப்பெற்றுள்ளன. அவற்றின் செய்யுட்கு எண்வரம்பில்லை. மூந்நூறு, ஐந்நூறு, ஆயிரம், ஏழாயிரம் என்றாற்போலத் தொகை வரம்பு இன்றி அவை யாக்கப்பெற்றுள்ளன. சில வாகுளி (சோதிட) நூல்களும் அந்தாதித்துப் பாடப்பெற்றிருக்கின்றன.

தமிழ்க் கழகக்காலத்து அந்தாதிகளைக் குறித்து முன் கூறினேம். பிற்காலத்துத் தோன்றிய அந்தாதிகள் இத்துணை என்று எண்வகுத்துக் கூறுதல் இயலாததொன்று. அவை எண்ணிக்கையில் மிகப் பல்கி உள்ளன. சடகோபவந்தாதி, சரசுவதியந்தாதி (கம்பர்), திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி என்பன கி. பி பத்தாம் நூற்றாண்டுக்கும் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவை. திருவேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப்பந்தாதி, திருக்கருவை வெண்பாவந்தாதி, திருக்கருவைக் கலித்துறை யந்தாதி, கந்தரந்தாதி என்பன பதினைந்து பதினேழாம் நூற்றாண்டுகளின் இடையே தோன்றியவை. பழமலையந்தாதி, திருச்செந்தில் நிரோட்டகயமகவந்தாதி, அருணகிரியந்தாதி, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, மறைசையந்தாதி, கல்வளையந்தாதி திருவொற்றியூரந்தாதி, கச்சியந்தாதி, நெல்லையந்தாதி, மாவையந்தாதி, கலைசையந்தாதி, திருமயிலைத்திரியந்தாதி, திருச்சுழியல் வெண்பாவந்தாதி, மருநாரந்தாதி, அபிராமியந்தாதி, புலியூரந்தாதி முதலியன பிற்காலத்துத் தோன்றிய அந்தாதிகளாம். இவையன்றி இன்னும் வெளிப்போதராத அந்தாதிகளும் பல, இந்நூற்றாண்டில்

இயற்றப்பெற்ற அந்தாதிகளும் பல. இப்பொழுது வடிவாய்க் கொண்டிலக்கும் அந்தாதிகளும் பலவாகும். பிரபந்தங்களில், இயற்றுவதற்கு எளியவாகிய அந்தாதி இரட்டைமணி மாலை முதலியன பல்கிக்கொண்டே வருகின்றன. அரியவாகிய பரணி, கோவை முதலியன அருகியே காணப்படுகின்றன.

அந்தாதிகளில் செய்யுட்கள் வரிசையாக அந்தாதித்து வருவதுபோல, இறுதிச் செய்யுளும் முதற் செய்யுளும் அந்தாதித்து நிற்கும். இவ்வாறு வருதலை மண்டலித்து வருதல் என்பர். இவ்வாறு பாடப்படுவதனுல் அந்தாதிகள் நினைவிற் கொணர்வதற்கு எளிதாகின்றன. முதற்பாட்டின் முதற்சொல் மறக்கப்படினும், யாதேனும் ஒரு பாட்டின் முதலைக்கொண்டு பாடிவரும் பொழுது எல்லாப் பாடல்களும் நினைவில் வரத்தக்கனவாம்.

'பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்'.

என்பது அற்புதத் திருவந்தாதியின் முதற்பாட்டு,

'உரையினு லிம்மாலை யந்தாதி வெண்பாக்
கரையினுற் காரைக்காற் பேய்சொல்—பரவுவார்
ஆராத அன்பினே டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து.'

என்பது அதன் இறுதிப்பாட்டு. இவற்றுள், இறுதிப்பாட்டின் இறுதிச்சொல்லாகிய பிறந்து என்பது முதற்பாட்டின் முதற்சொல்லாய் அமைந்திருத்தல் காண்க.

அந்தாதிகள் செம்பாகமாகவும் திரிபாகவும் யமகமாகவும் பாடப் பெறுவதுண்டு.

விரிகின்ற ஞாயிறு போன்றது மேனியஞ் ஞாயிறுசூழ்
தெரிகின்ற வெங்கதி ரொத்தது செஞ்சடை யச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது கண்டமக் காரிருட்கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுள தாலெந்தை யொண்பொடியே,

என்பது செம்பாகம். —பொன்வண்ணத்தந்தாதி.

இறவாத வாநந்த வெள்ளத் தழுத்தி யெனையருளால்
துறவாத வாநந்த வாள்வதென் றேமெய்த் துறவர்தொழும்
அறவாத வாநந்த வனஞ்சூழ் முதுகுன் றடைந்தவர்தம்
உறவாத வாநந்த கோபால னென்றற் குடையவனே

என்பது திரிபு. —பழமலையந்தாதி.

திரிபாவது முதலெழுத்தொழிய இரண்டு முதலிய எழுத்துக்கள் அடிதோறும் ஒத்துவருவது. இவ்வாறு வரும் அந்தாதியைத் திரிபந்தாதி என்பர்.

கந்தரங் கானந் தனிற்சென் றடங்கிலென் காசிக்கநே
கந்தரங் கானந்த நண்ணிலென் கன்னியர் கட்டளக
கந்தரங் கானந்த நின்று டெழிற்செந்திற் கண் டிறைஞ்சிக்
கந்தரங் கானந்த நல்கச் சனனங் கடந்திலரே.

என்பது யமகம்.

யமகமாவது முதலடியில் வந்த எழுத்துக்களே அடிதோறும் வரத்தொடுப்பது. இவ்வாறு வரும் அந்தாதியை யமகவந்தாதி என்ப. ஐந்தெழுத்திற் குறைந்து வரும் திரிபும் யமகமும் சிறப்பில.

தமிழுக்கே தனிச் சிறப்புடைய அகப்பொருள் துறைகளை இலக்கியங்களில் அமைத்துப் பாடுவதில் நம் தமிழ்ப்புலவர்கட்கு ஆர்வம் மிகுதி, தோத்திரப்பாடல்களிலும் கூட அகப்பொருள் துறைகளைப் பார்க்கின்றோம். தேவார ஆசிரியர்களும் அவற்றை இகந்தாரிலர், அந்தாதிகளிலும் அகப்பொருள் துறைகள் அமைத்துப் பாடுவதுண்டு. தமிழிலக்கியங்களில் அகப்பொருளுக்கு ஒரு தனியிடம் அளிக்கப்பட்டு வருகின்றது.

ஆவன யாரே யழிக்கவல் லாரமை யாவுலகில்
போவன யாரே பொதியகிற் பார்புர மூன்றெரித்த
தேவனைத் தில்லைச்சிவனைத் திருந்தடி கைதொழுது
தீவினை யேனிழந் தேன்கலை யோடு செறிவளையே.

என்பது பாட்டுடைத் தலைவனையே கிளவித்தலைவனாகக் கொண்டு பாடிய அகப்பொருள் துறை. சிவபெருமானைக் கண்டு கை தொழுத தலைவி, அவன்மீதுகொண்ட ஆர்வத்தால் மேகலையையும் தன் கைவளைகளையும் இழந்தாள். ஆர்வத்தால் உடல் மெலிந்தது. உடல் மெலிய மேகலை நெகிழ்ந்தது; வளைகள் கழன்றன,

அந்தாதி உலா முதலிய சிற்றிலக்கியங்களை முதன் முதல் பாடங் கேட்டுவரும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது. அச் சிற்றிலக்கியங்களை முதன்முதல் பாடங் கேட்டு உணர்வதனுல், அரிய சொற்களையும் சொல்லமைப்புக்களையும் இன்றியமையாத இலக்கண நுட்பங்களையும் அணிவகைகள் முதலியவற்றையும் எளிதில் அறிய இயல்கின்றது, செவ்விய தீவிய செழுஞ்சொற்களை யும் அருஞ்சொற்களையும் அறிந்து, சிறந்ததொரு சொல் தொகுதியை உள்ளத்தில் அமைத்துப் போற்றுவதற்கு அந்தாதி முதலிய சிற்றிலக்கியங்கள் நன்கு பயன்படுகின்றன. ஆகவே சிறந்த அந்தாதிகளை மனப்பாடஞ் செய்வது சிறந்த புலமை எய்து வதற்குரிய முதல் நெறியாகும் என்க. சிறந்த அந்தாதிகளை இயற் றிப் புலவர்கள் தமிழுக்கு ஆக்கம் தரவேண்டும். உலகிலேயே சிற்றிலக்கியங்களாலும் பேரிலக்கியங்களாலும் விரிவடைந்து விளங்குகின்ற மொழி தமிழ்ஒன்றேயாம் என்பது நமது உள் ளத்தில் மாருத மட்டற்ற மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கின்றது. மேன்மேலும், அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழி குற்றமில் பெருமைச் சிற்றிலக்கியங்களால் ஒண்மையுந் திண்மையும் உற்று ஒளிர்வதாக,

(முற்றும்)

வேற்றுமையா? வினையெச்சமா?

(மா. இளையபெருமாள், எம். ஏ., எம். லிட்.)
தமிழாராய்ச்சித்துறை, திருவனந்தபுரம்.

தமிழ்ச்சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என்று பாகுபாடு செய்கிறார் தொல்காப்பியர். இவற்றுள் முதன்மையான பெயர் வினை ஆகியவைகளுக்கு முறையே வேற்றுமை ஏற்பதும், காலங் காட்டுவதும் முக்கியமான இலக்கணங்களாகக் கருதப்படுகின்றன. அதுவோ இதுவோ என்று ஐயமுறும் வகையில் இலக்கணம் அமைந்த சொற்களைப் பொதுவாக்காது ஒரு குறிப்பிட்ட வகையில் இலக்கணம் அமைத்துக்கொள்கிறது. உதாரணமாக வினைப்பெயர், வினையடியில் பிறந்து, காலங்காட்டும் வினையிலக்கணத்தைக் கொண்டிருந்தாலும் வினையாகக் கருதப்படுவதில்லை. வினை முதலாகவும் உருபேற்றும் வருகின்ற இவ்வகைச் சொற்களைப் பெயராகவே வகுக்கிறது இலக்கணம். இச்சொல்லைப்போல ஐயப்படுமுறையில் அமைந்த ஒருவகைச் சொல்லை இங்குப் பார்ப்போம்.

வினையெச்சங்களை வாய்பாடுகளாகத் தொகுத்துத் தருகிறார் தொல்காப்பியர்.

> செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
> செய்யியர் செய்திய செயின்செயச் செயற்கென
> அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி. (சொல் 228)

என்பது அவரது நூற்பா. இவைகளில் செயற்கு என்னும் வாய்பாட்டுச் சொல்லே இங்குச் சிந்தித்தற்குரியது. செயல் என்னும் தொழிற்பெயர் கு உருபை ஏற்கும்போதும் செயற்கு என்னும் வடிவம் பெறுகிறது. நான்காம் உருபேற்ற இத்தொழிற்பெயரும் தொல்காப்பியர் காட்டும் செயற்கு என்னும் வாய்பாட்டுச் சொல்லும் வெவ்வேறு இலக்கணங்களைக் கொண்டனவா என்பதை நினைப்பதே இக்கட்டுரைப் பொருள்.

இச்சொற்களுக்கிடையில் ஒருவகை ஓசை வேறுபாட்டைக் காண்கிறார் சேனாவரையர். "செயற்கு என்னும் வினையெச்சம்

உருபேற்று நின்ற தொழிற் பெயரோடு ஒப்புமை உடைத்தாயி னும் உருபும் பெயரும் போலப் பகுப்பப் பிளவு பட்டிசை யாது ஒன்றுபட்டிசைத்தலால் அதனின் வேறாகும்" என்பது அவருடைய கருத்து. செயற்கு என்னும் வாய்பாட்டில் ஒரு வகை வினையெச்சம் உண்டு என்ற தொல்காப்பியர் கருத்தை ஏற்றுக்கொண்ட பின்புதான் இவ்விசை வேறுபாட்டை ஒத்துக் கொள்ள முடியும். ஆகவே இலக்கியங்களில் இவ்வகைச் சொற்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதைக் காண்போம்.

சங்க இலக்கியங்களில் இவ்வகைச் சொற்கள் அரியனவல்ல என்பதைக் கீழ் வரும் உதாரணங்களால் தெளியலாம்.

வரற்கு அறைந்தன்று	கலித்தொகை 141—6
தரற்கு இறப்பர்	குறுந்தொகை 331
படற்கு உய்ம்மோ	ஐங்குறுநூறு 83
செலற்கு ஏமதி	நற்றிணை 21—4
வரற்குச் சேறுகம்	பதிற்றுப்பத்து 49—17
பிரியற்குப் பரவுதும்	பரிபாடல் திரட்டு 1—82
உயற்கு...போகுக	குறுந்தொகை 57
விடற்கு முயங்கினே	கலித்தொகை 64—31

செயற்கு என்னும் வாய்ப்பாட்டுச் சொற்கள்கொண்டு முடியும் சொற்களைப்பொறுத்த அளவில் அவைகளுக்கும் நான்காம் உருபேற்ற ஏனைய பெயர்களுக்கும் வேற்றுமை கொள்வதற்கில்லை என்பதைத் தெரிவிக்கச் சான்றுகள் காணப்படுகின்றன.

கொளற்கு அரிது	புறநானூறு 110—2
உயிர்க்கு அருமையன்	திருமுருகாற்றுப்படை 278
புகற்கு அலமரும்	புறநானூறு 58—26
உயிர்க்கு அலமரும்	... 361—2
கொளற்கு இவரும்	குறுந்தொகை 361
கடற்கு இவர்தரும்	மதுரைக்காஞ்சி 245
தப்பற்கு இறுக்கும்	அகநானூறு 103—12
இவணர்க்கு...இறுத்த	பதிற்றுப்பத்து 74—21

மருவரற்கு உலமருவோர்	ஐங்குறுநூறு 464
வாழ்க்கைக்குஉலமருவோர்	புறநானூறு 51—11
கொளற்கு ஒத்த	கலித்தொகை 48—2
தாட்கு ஒப்ப	பொருநராற்றுப்படை 41
கொளற்கு...செய்தல்	புறநானூறு 213—24
செய்யும்...தாய்க்கே	குறுந்தொகை 8—6
செயற்குப் பணியியர்	புறநானூறு 6—18
பார்ப்பார்க்கு...பணிபு	பதிற்றுப்பத்து 63...1
செலற்கு வா	அகநானூறு 240—15
வினைக்கு...வருமோ	குறுந்தொகை 63

சங்க இலக்கியங்களில் இவ்வகைச் சொற்கள் குறிப்பு வினைகளையும் கொண்டு பெரும்பான்மை முடிவதைக் காண்கிறோம். குறிப்பு வினைகள் அருமை, உரிமை, இனிமை ஆகிய பொருளையும், தெரிநிலை வினைகள் அறைதல். இவர்தல், ஏகுதல், பணிதல், பரவுதல், போதல், முயங்குதல், வருதல் முதலிய பொருளையும் கொண்டிருக்கின்றன.

நான்காம் வேற்றுமைக்கு உரிய பொருளாகத் தொல்காப்பியர் விதந்து கூறுவன பத்து. அதற்குவினையுண்டமை, அதற்குப் படுபொருள், அதுவாகுகிளவி, அதற்குயாப்புடைமை, அதற் பொருட்டாதல், நட்பு, பகை, காதல், சிறப்பு ஆகியன அவை. நச்சினார்க்கினியர் எளிமையை யாப்புடைமையிலும், உண்மை, இன்மை, வன்மை, உரிமை, தோற்றல், ஈனல், தகுதல் முதலியவற்றை அப்பொருளும் என்றதனுலும் அடக்கிக்கொள்கிறார். இங்கு இடர்ப்பாடு உருபேற்ற தொழிற்பெயர்க்கு மட்டுமல்ல, ஏனைப் பெயர்க்கும் உண்டு.

செயற்கு என்னும் வாய்ப்பாட்டுச் சொற்கள் உருபேற்ற தொழிற்பெயரே என்பதற்கு மூன்ருவது காரணம் அல்லீற்றுத் தல்லீற்றுத் தொழிற்பெயர் இரண்டும் உருபேற்று இப்பொருளில் வருவதாகும். செயற்கு செய்தற்கு ஆகியவை பொருளாலும் வேற்றுமை உடையனவல்ல என்பதற்கு உரையாசிரியர்கள் ஒன்றை மற்றொன்றுக்குப் பொருளாகக் கூறுதல் ஒரு சான்ருகும்,

பட்டினப்பாலையில் "பெறற்கு" (104) என்ற சொல்லுக்குப் பெறுதற்கு என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுவதும் புறநானூற்றில் "கொளற்கு" என்பதற்குக் (110-2) கொள்ளுதற்கு என்று பழைய உரையாசிரியர் பொருளுரைத்தலும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

இவை வினையெச்சம் என்பதற்கு வினை அடிப்படையில் பிறத்தலை ஒரு காரணமாகக் கொண்டால் செயலை, செயலால் செயலின், முதலிய ஏனை உருபேற்ற தொழிற்பெயர்களையும் வினையெச்சமாகக் கொள்ள வேண்டும். வினை கொண்டு முடிவதைக் காரணமாகக் கொண்டால், வினை கொண்டு முடியும் ஏனை வேற்றுமைச் சொற்களை எல்லாம் வினையெச்சம் என்று கூறவேண்டும். அன்றியும் செயற்கு என்னும் வாய்ப்பாட்டுச் சொற்கள் நான்காம் உருபேற்ற ஏனைப் பெயர்கள்போல ஏனைச் சொற்களைக் கொண்டு முடிவதையும் நாம் இங்கு முக்கியமாகக் கருதவேண்டும். உருபேற்ற தொழிற் பெயர்கள் வினையெச்சமல்ல என்பதற்கு முக்கியமான காரணம், அவை உருபேற்ற ஏனைப் பெயர்கள்போல வினைச்சொற்களைக்கொண்டு மட்டுமல்ல. பெயரையும் இடைச்சொல்லையும் கொண்டு முடிதலாகும். ஆடற்கு நீர் (11-49) செயற்கு முன்னை (8-87) என்ற பரிபாடல் சொற்கள் உதாரணமாக விளங்குகின்றன.

இவை பெயரும் உருபுமே என்பதற்கு மிக முக்கியமான காரணம் இவ்வுருபு பிற வேற்றுமைப் பொருளில் மயங்கி வருதலாகும். பெயற்கு எதிரிய (ஐங்குறுநூறு 433) என்பது பெய்தலை ஏற்றுக்கொண்ட என்று இரண்டாம் வேற்றுமைப் பொருளிலும், செயற்கு முன்னை என்பது செய்தலானது முன் என ஆறும் வேற்றுமைப் பொருளிலும், மயங்கி வருகின்றன.

எனவே செயற்கு என்னும் வாய்ப்பாட்டுச் சொற்கட்கும் நான்காம் உருபேற்ற ஏனைப் பெயர்களுக்கும் வேற்றுமையில்லை என்பதற்கு நாம் கண்ட காரணங்கள் பின்வருமாறு.

1. கொண்டுமுடியும் சொல்லாலும் பொருளாலும் வேற்றுமையில்லை.
2. செயலை, செயலால் முதலியவை வினையெச்சமாகக் கொள்ளப்படவில்லை.
3. பெயரையும் இடைச்சொல்லையும் கொண்டுமுடிவது.
4. வேறு வேற்றுமைப்பொருளில் மயங்கிவருவது.

ஆகவே செயற்கு என்பதை நான்காம் உருபேற்ற தொழிற் பெயராகக் கொள்வதே பொருத்தம் என்பதும் வினையெச்சமாகக் கருதுவது பொருத்தமற்றது என்பதும் பெறப்படுகின்றன,

உலகச் சமயங்கள்

(கி. பழநியப்பன்)

(56-ஆம் பக்கத் தொடர்ச்சி)

4-யூதர் சமயம்

ஈரான் நாட்டிற்கு அண்மையில் சால்திசு எனும் நாட்டிலுள்ள ஊர் என்ற நகரம் மிகவும் தொன்மையானது. சற்றேறக் குறைய 4000 ஆண்டுகளுக்குமுன் தோரா என்னும் ஒரு குயவன் அந்நகரில் வாழ்ந்துவந்தான். அந்நாட்டுமக்கள்வழிபடும் பல்வேறு தெய்வங்களின் உருவங்களைக் களிமண்ணில் செய்து விற்பது அவனது தொழில்; கற்சிலைகளும் செய்வான். அவனுக்கு ஆபிரகாம், நாகூர், ஆரன் என்ற மூன்று மக்கள் இருந்தனர். அவர்கள் வேலை ஆடு மாடுகள் மேய்த்தல். அதனுடன் ஓய்வு நேரங்களில் உருவங்கள் செய்வதிலும் தந்தைக்கு உதவி செய்வர்.

ஆபிரகாம் நுண்ணிய அறிவுடையவன். ஆடுகளைப் புல் வெளிகளில் மேய விட்டுவிட்டு மரநிழலில் படுத்து ஏதாவது சிந்தனையில் ஆழ்ந்திருப்பான். 'காலையில் களிமண்ணால் தான் செய்த ஒரு நரியின் உருவத்தை மாலை வீடு சென்றவுடன் எதற்காக வழிபடவேண்டும்? அஃது எங்கிருந்து எவ்வாறு தெய்வ சக்தியைப் பெற்றது?' எனப்பலவாறு சிந்திப்பான் ஆபிரகாம். தன் தந்தையினிடமும் அந்த நாட்டுப் பூசாரிகளிடமும் கேட்டுத் தன் ஐயத்தை நீக்கிக் கொள்ள அவனுக்குத் துணிவு இல்லை. அந் நாட்டில் உருவ வழிபாட்டை மக்கள் மிகவும் போற்றிவந்தனர். அதனைக் குறை கூறுவதையோ அதனிடம் ஐயம் கொள்வதையோ அவர்கள் பெரும் பாவச்செயலாகக் கருதினர்.

உருவ வழிபாடுகளில் ஆபிரகாம் மனம் செல்லவில்லை. சிந்தனை செய்யச்செய்ய அதனிடம் வெறுப்பு அதிகமாயிற்று. வீடு முழுவதும் தன் தந்தையாரும் தானும் செய்த உருவங்கள் நிறைந்திருப்பதைப் பார்க்கும்பொழுதெல்லாம் அவனுடைய உள்ளம் அமைதி இழந்தது. ஒருநாள் தன் தந்தை வீட்டில் இல்லாத

நேரம் ஆபிரகாம் தடியொன்றை எடுத்து வீட்டிலிருந்த உருவங்கள் அனைத்தையும் சுக்கு நூருக்கிருன். ஒரு பெரிய உருவத்தை மட்டும் உடைக்காதுவிட்டு அதன்கையில் அந்தத்தடியை வைத்து விட்டான்.

தந்தையார் வந்தார், தான் அருமையாகச் செய்து அடுக்கி இருந்த தேவவுருவங்கள் உருத்தெரியாது உடைக்கப்பட்டு கிடந்ததைக் கண்டார். உள்ளம் பதறினர். தன் வியாபாரம் கெட்டு விட்டதே என்பதற்காக அன்று தேவர்களுக்குக் கோபம் வந்துவிடுமே என்று அஞ்சினர். மகனை அழைத்து 'ஏனடா இவ்வாறு உடைத்தாய்? என்று சீறினர்.

"நான் உடைக்கவில்லை, அப்பா. அதோ தடியுடன் நிற்கும் சிலைதான் இவ் வேலையைச் செய்தது" என்றுன் ஆபிரகாம்.

''பொய்சொல்லாதே, சிலையாவது உடைப்பதாவது?, அது வைத்த இடத்தில் அப்படியே இருக்குமேயொழிய, அது நகர்ந்தது சண்டையிட்டது, உடைத்தது என்று யாரிடம் கூறுகின்றுய்? நீதான் இத் தீயசெயலைச் செய்துள்ளாய்"

"அப்பா! மன்னிக்கவும். இச்சிலைகள் ஒன்றும் செய்யா; வைத்த இடத்தில் அப்படியே இருக்குமாயின் இவைகளினுல் யாருக்கு என்ன பயன்? அவைகளை நாம் ஏன் வணங்கவேண்டும்" என்று ஆபிரகாம் துணிவுடன் தந்தையைக் கேட்டான்.

தோராவிற்குப் பதில் என்ன கூறுவது என்று தெரியவில்லை. வாய் குழறினர். 'அவை நாம் வழிபடும் தெய்வங்களல்லவா? என்று ஏங்கினர்.

"இவை பயனற்ற பொருள்கள். அதனுல் அவற்றை நானே உடைத்தெறிந்தேன். இவ்வாறு உருவங்களை வழிபடுவது முறையன்று" என்று விளக்கம் கூறினுன் ஆபிரகாம். 'உருவங்களை வழிபடுவது முறையன்று என்றுல், பின்னர் எதனை மக்கள் வழிபடுவது?"

"ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் முதலியவைகளைப் படைத்த பரம்பொருளை வழிபடுங்கள்! உயிரினங்களையும், பருவ

மழைகளையும், பயிர் பச்சைகளையும் படைத்த ஆண்டவனை வழி படுங்கள்" என்றான் ஆபிரகாம்.

இம்மாதிரியான விரும்பத்தகாத சொற்களைத் தோரா இது வரை கேட்டதே இல்லை; தோராமட்டில் என்ன, அந்நாட்டு மக்களே கேட்டது கிடையாது. ஆபிரகாமின் செயலும் அவன் பேசிய பேச்சுக்களும் சிறிது சிறிதாக ஊர்முழுவதும் பரவி விட்டன. மக்கள் சினங்கொண்டனர். ஆபிரகாமும் அவனது மனைவி மக்களும் அவ்வூரில் வாழ்வதே கடினமாகிவிட்டது. உயிருக்கே கேடுஏற்படும் நிலை தோன்றியது. நாட்டைவிட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை.

ஆபிரகாம் தன் மனைவியுடனும், ஒரு சில உறவினர்களுடனும் நண்பர்களுடனும் தங்களுடைய உடைமையான ஆடு மாடுகளையும் பற்றிக்கொண்டு சால்திசுநாட்டை விட்டு வெளியேறினான். வடக்குநோக்கிச் சென்று கானான் நாட்டை அடைந்தனர். கானான் மக்கள் ஆபிரகாம் கூட்டத்தினரை ஈபுரு (Hebrew) என்று அழைத்தனர். ஈபுரு என்றால் நாடுகடந்து வந்தோர் என்பது பொருள். அப்பகுதியிலுள்ள மக்களும் உருவ வழிபாட்டில் நம்பிக்கை உடையவர்களே. அங்கு ஆபிரகாம் கூட்டத்தினர் மட்டும் உருவவழிபாடுகளில் ஈடுபடாது வாழ்ந்து வந்தனர்.

ஆண்டுகள் பல கடந்தன. ஆபிரகாம் குடும்பமும் வளர்ந்தன. ஆபிரகாமிற்கு ஐசக் என ஒரு மகன் இருந்தான். ஐசக்கிற்குச் சாக்கோப் என்று ஒரு மகன். சாக்கோப்பை இசுரேல் என்றும் அழைப்பர். இசுரேலுக்குப் பன்னிரண்டு ஆண்மக்கள் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவர் குடும்பமும் பல பிரிவுகளாக வளர்ந்தது. இவ்வாறு இசுரேல் குடும்பத்தினர் மிகவும் பெருகி ஒரு பலம்பெற்ற இனமாக விளங்கியது. அவர்களனைவரும் இசுரேல் கூட்டத்தினர் என அழைக்கப்பெற்றனர். நாடோடிகளான அவர்கள் தொழில் ஆடு மாடுகள் மேய்த்து, வளப்பமான இடங்களைத்தேடிச்சென்று குடியேறுதல். இவ்வாறு அவர்கள் வாழ்ந்துவந்த கானான் பகுதியில் ஒருசமயம் வானம்

பொய்த்துப் பஞ்சம் ஏற்பட்டது. வறுமையுற்று வாழ வழி யின்றி எகிப்து நாட்டிற்குச் செல்லத்துணிந்தனர் இசுரேல் கூட்டத்தினர். ஏனெனில், நைல்நதிப் பள்ளத்தாக்கின் வளத் தைப்பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர்.

எகிப்தியர்கள் தங்கள் நாட்டிற்கு வந்த இசுரேலினத்தின ருக்கு, நைல்நதிக்கரையில் கோசன் என்ற பகுதியில் குடியேற இடங்கொடுத்தனர். பல ஆண்டுகள் அங்கு அவர்கள் அமைதி யாக வாழ்ந்துவந்தனர். மக்கள் தொகையும் பலமடங்கு பெரு கிற்று. எகிப்தியர்களுடன் தொடர்பில்லாது தனித்தே வாழ்ந்து வந்தனர். எகிப்தில் இசுரேலினத்தினர் யூதர்களென்றும், ஈபுருக்களென்றும் அழைக்கப்படுவர்.

எகிப்தியர் உருவவழிபாடுகளில் மிகமிக நம்பிக்கையுடைய வர்கள். பல நூற்றுக்கணக்கான உருவங்களை வணங்கி வருவர். உருவ வழிபாட்டை வெறுக்கும் ஈபுருக்களின் எண்ணிக்கை நாள்தோறும் வளர்ந்துவருவதைக் கண்ட எகிப்தியர் மனக் குழப்பமடைந்தனர். அவர்கள் எகிப்தியர் சமயத்தையே ஒழித்து விடுவார்களோ என்று அஞ்சினர். ஈபுருக்களை வெறுக்கத் தொடங்கினர். அரசன், அமைச்சர்களையும் பூசாரிகளையும் அழைத்து, ''ஈபுருக்களினுல் உண்டாகும் கேட்டைத் தவிர்ப்ப தற்கு என்ன செய்வது?'' என்று கேட்டான்.

ஈபுருக்களின் வலிமை வளர்ந்து வருவது என்றும் எகிப் திற்குக் கேடேயாகும்; அவர்களை உடனே அடக்கி ஒடுக்கா விடில் எகிப்தியர் சமயமே அழிந்தாலும் அழிந்துவிடும் என்று அனைவரும் கருதினர்.

''ஈபுருக்களின் கொள்கைகளை மாற்றுவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அவர்களை அடிமைகளாக்கவேண்டும். அடி மைகளுக்குச் சிந்தனை செய்யும் ஆற்றல் கிடையாது. சிந்திக்கும் செயலற்ற ஈபுருக்கள் உருவ வழிபாட்டையும் நமது சமயத்தை யும் ஏற்றுக்கொள்வர்'' என்ற உண்மையை அறிஞர்கள் எடுத் துக்கூறி அரசனையும் அதற்கானவன செய்யுமாறு தூண்டினர்.

அரசனும் அவர்கள் கூறிய வழியைச் சரி என ஏற்று, நாட்டிலுள்ள ஈபுருக்கள் அனைவரும் எகிப்தியர்களின் அடிமைகளாகவே வாழவேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான்.

சிறிது சிறிதாக அவர்கள் எண்ணியபடி ஈபுரு அடிமைகள் எகிப்தியர் வழிகளைப் பின்பற்றத்தொடங்கினர். உருவ வழிபாடுகளிலும் ஈடுபட்டனர். அதைக்கண்ட எகிப்தியர் மகிழ்ச்சியுற்றாலும் அவர்கள் மனதில் மட்டும் ஒருபயம் குடிகொண்டிருந்தது. ஈபுருக்கள் அடிமைகளாக வாழ்ந்தாலும் அவர்கள் இனம் தனித்தே இருந்து நாள்தோறும் பெருகிவந்தது. இவ்வாறு பெருகும் ஓர் இனம் என்றாவது ஒருநாள் வெளிப்படையாகக் கிளர்ச்சியைத்தொடுக்குமோ என்று பூசாரிகள் அஞ்சினர். இதனால் வருங்கேட்டை அரசனுக்குக்கூறி ஒரு கடுமையான சட்டத்தை இயற்றச்செய்தனர். ஈபுருக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதே அதன் நோக்கம். அச்சட்டப்படி ஈபுருக்கள் தங்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளை அவ்வப்பொழுதே நீரில் அழுத்திக் கொல்லவேண்டும். பெண்குழந்தைகள் வயதுவந்தவுடன் எகிப்தியர்களையே திருமணம் செய்துகொள்ளவேண்டும்.

இங்கிலையில் ஈபுரு பெண்ணரசி ஒருத்தி ஆண் மகவு ஒன்றை ஈன்றாள். அரசு ஆணைக்கு இணங்க அக்குழந்தையை அவள் நீரில் மூழ்கடிக்கவேண்டும். ஆனால் அவளுக்கு அவ்வாறு செய்ய மனம் துணியவில்லை. எனினும் அரச தண்டனைக்கு அஞ்சிக் குழந்தையை ஒரு கூடையில் வைத்து, ஆண்டவன் துணைசெய்வார் என்ற நம்பிக்கையுடன், ஆற்று வெள்ளத்தில் விட்டு விட்டாள். சற்றுத்தொலைவில் நீராடிக்கொண்டிருந்த அரசகுமாரி அக்குழந்தையைக் கண்டு அன்புடன் எடுத்து அணைத்துக்கொண்டாள். மகப்பேறு இல்லாத அவள் அக்குழந்தையைத் தன்குழந்தையாக எண்ணி வளர்த்து வந்தாள், குழந்தை மோசசு என்றுபெயரிடப் பெற்று அரண்மனையில் ஓர் இளவரசனாக வளர்க்கப்பெற்றான்.

மோசசு பெரியவனான பின்பு ஒருநாள் தன்னுடைய பிறப்பின் இரகசியத்தைத் தற்செயலாகத் தெரிந்து கொண்டான்.

அடிமை ஈபுரு இனத்தைச் சேர்ந்தவன் என்பதை உணர்ந்தான். அந்நாட்டில் தன்இனத்தினர் நிலையைக்கண்டு மிகவும் வருந்தினன். தான் ஒரு எகிப்திய இளவரசனாகக்கருதப்பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்துவருவதை அவன் விரும்பவில்லை. தன் இனத்தினர் துயரத்தைத் துடைக்கும் வகையையே அவன் அல்லும் பகலும் எண்ணி வந்தான்.

ஒரு நாள் ஈபுரு அடிமைக் கூட்டமொன்றை! இழுத்துச் சென்ற எகிப்தியன் ஒருவன் இருஅடிமைகளை இரக்கமின்றி அடிப்பதைக்கண்ட மோசசு, கடுஞ்சினங் கொண்டு அந்த எகிப்தியனைத் தன்னுடைய வாளுக்கு இரையாக்கினன், அந்த நிகழ்ச்சி மோசசின் பிறப்பின் இரகசியத்தை வெளிப்படுத்தி விட்டது. இனி அவர்களிடயே வாழமுடியாது எனக் கருதிய மோசசு அந்நாட்டிலிருந்து வெளியேறி மிதியான் பாலைவனத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டான்.

மிதியான் பாலைவனத்தில் சீத்ரோ என்ற பூசாரி தோட்டமொன்று அமைத்திருந்தான். அத்தோட்டத்தையடைந்த மோசசு அங்குக் காணப்பெற்ற பலவகையான மரங்களுக்கு இடையே கைத்தடி ஒன்று நடப்பட்டிருப்பதைப் பார்த்தான். அவ்வாறு கைத்தடி நடப்பட்டிருப்பதின் கருத்து என்ன வென்று மோசசு கேட்டபொழுது சீத்ரோ அதன் வரலாற்றை விளக்கிக் கூறினன். அஃது இசுரேல் மகன் சோசப்பினுடைய தடியென்றும், அவன் இறந்தபின் அவனுடைய உடைமைகளை அரசன் எடுத்துச் செல்லும் பொழுது தான் அத்தடியை விரும்பி அரசனிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டேன் என்றும் சீத்ரோ கூறினன். மேலும் அத்தடியை அதுவரை ஒருவராலும் நிலத்திலிருந்து எடுக்க முடியவில்லையென்றும் கூறினன். இவ்வரலாற்றைக் கேட்ட மோசசு அத்தடியின் ஆதிவரலாற்றைத் தெரிந்து கொண்டான். 'உலகில் முதலில் தோன்றிய மனிதனான ஆதம் வைத்திருந்த தடி அதுவேயாகும்' என்று கூறி ஒருவராலும் எடுக்க முடியாத அத்தடியை மிக எளிதாகத் தரையிலிருந்து பிடுங்கி

கொண்டான், இந் நிகழ்ச்சியைக் கண்ட சீத்ரோ மோசசின் சீரியஆற்றல் தெய்வத்தன்மையுடையது என்று கருதித் தன் மகள் சிப்போராவை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

மிதியான் பகுதியில் மோசசு ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுதும் எகிப்தில் அடிமைகளாக அவதியுறும் ஈபுருக்களின் நிலையையே எண்ணி வருந்துவான். அவர்கள் விடுதலை பெறும் நாள் என்று வருமோ என்று ஏங்குவான். இவ்வாறு எண்ணி எண்ணி அமைதியை இழந்தமோசசு. ஒருநாள் ஆதமின் தடியை எடுத்துக் கொண்டு எதிப்திய மன்னனிடம் சென்றான்.

'ஏ அரசனே! எங்களுடைய ஆண்டவனால் அனுப்பப் பெற்று நான் வந்துள்ளேன்! ஈபுருக்களை உடனே அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்பது அவரது கட்டளை." என்றான் மோசசு.

"உங்களுடைய அண்டவன் யார்?"

"ஆதிமுதல்வனே ஈபுருக்களின் ஆண்டவன்"

அரசன் தன்னுடைய வேத நூல்களைப் புரட்டிப்பார்த்தான். அதில் குறிக்கப்பெற்றிருந்த கடவுள்களின் பெயர்களை ஒவ்வொன்றாகப் படித்தான். மோசசு கூறிய பெயர் அதிற் காணப்படவில்லை,

'நீ கூறும் பெயரே இந்த வேதநூலில் இல்லையே, உன் பேச்சைக் கேட்டு நான் எவ்வாறு ஈபுருக்களை விடுதலை செய்வேன்? முடியாது." என்றான் அரசன்.

"அரசனே! என் கையிலிருக்கும் இத்தடியைப் பார். இதனுடைய சக்தியை நீ அறியமாட்டாய். ஈபுருக்களை விடுதலை செய்யாவிடில் உங்நாட்டிலுள்ள குடிநீர் எல்லாம் குருதியாக மாற்றிவிடும் சக்தி வாய்ந்தது இத்தடி" யென்றான்.

அரசன் அதை நம்பவில்லை.

மோசசு தடியைத் தூக்கி "நீர் எல்லாம் குருதியாக மாறுக" என்றான். மறுசணமே நதிகள், ஓடைகள், ஊற்றுகள், கிணறு

கள், குளங்கள் எல்லாவற்றிலுமுள்ள தண்ணீர் குருதியாக மாறி விட்டது.

அதைக்கண்டும் அரசன் கவலைப்படாது ஈப்ருக்களை விடுவிக்கமுடியாது என்று கூறிவிட்டான்.

மோசசு மறுபடியும் தடியைத்தூக்கி "அந்நாட்டில் தவளைகளும் பூச்சிகளும் பெருக்கெடுத்துப் பயிர் பச்சைகளை அழிக்கவும்" என்றான். அவ்வாறே நடந்தது. ஆனால் அரசன் மனம் மட்டும் மாறவில்லை.

மோசசு கடைசி முறையாகத் தடியைத் தூக்கி, "இந்நாட்டில் பிறந்த தலைப்பிள்ளைகளெல்லாம் மரணமடைக" என்றான்.

அரசன் அவனுடைய தந்தைக்குத் தலைப்பிள்ளை. தனக்கு மரணம் கிட்டுவதை உணர்ந்தான்.

"மோசசு! என் உயிரைக் காப்பாற்று. உன் விருப்பம்போல் ஈப்ருக்களை விடுவிக்கின்றேன்" என்று அலறினான். மோசசும் அதற்கு இணங்கினான்.

அரசன் தன் உயிரைக் காப்பதற்காக ஈப்ருக்களுக்கு விடுதலை கொடுத்தான். விடுதலை பெற்ற ஈப்ரு அடிமைகள் அந்நாட்டை விட்டு வெளியேறி மோசசைப் பின்தொடர்ந்து சென்றனர்,

(தொடரும்)

வினையம்

சங்கீத வித்துவான் (வாய்ப்பாட்டு) ப. சுந்தரேசன், திருக்குடந்தை

நம் செந்தமிழ் மொழி, மிகப் பழைய காலத்திருந்தே முப்பாலாகத் திகழ்ந்து வருவதாகும். அவை, இயற்பகுதி, இசைப்பகுதி, நாடகப் பகுதி எனப்படுவதைத் தமிழ் கற்றறிந்தார் யாவருமே நன்கறிந்துணர்வர்.

இவற்றுள் இறுதியாகவிருப்பது நாடகத்தமிழாகும். அத்தமிழும் மிகப் பழங்காலத்தில் ஆடல் வகைகளின் கூறுபாட்டினையே நன்கு சிறப்புற விளக்கி வந்துள்ளனர். பொதுப்பட நின்று விளக்கிப் பல்கிக் கிடக்கும் தமிழ்ச் சொற்கள் யாவுமே, அதனதற்குரிய பொருள் கொண்டு திகழ்வதன்றித் தமிழ் மொழிக்கேயுரிய முப்பாலிலும் அதாவது இயல், இசை, நாடகம் என்ற முப்பிரிவுகளிலும் அவ்வப்பகுதிக்குரிய தனியாயதோர் பொருளினைக் கொண்டும் திகழ்ந்து வருவது வழக்கு. இவ்வகையில், இக்கட்டுரையின் தலைப்புச் சொல்லாய வினையம் எனுஞ்சொல். சிறப்பு முறையில் நாடகத் தமிழிற்கேயுரிய சொல்லாகும். இச்சொல்லின் பகுதி, வினை; விகுதி அம்.

இயற்றமிழ்ச் சொற்களியாவும் இயல்பாகவே மக்களின் உள்ளக் கருத்திற்றோன்றிய எண்ணங்களை, மொழியின் வழி வெளிப்படுத்தப்படும் நீர்மையிலேயே திகழ்ந்து வருவனவாகும். மேலும் அம்மக்களின் செவிப் புலனால் மட்டுமே ஓர்ந்துணரத் தக்க இன்ப நுகர்ச்சிக் கேதுவான ஒலியின் நீட்சியே இசைத்தமிழின் அடிப்படையாகும். அத்தகைய ஒலிவகையின் நீட்சியையும் அவை தோன்றிய வரன் முறைகளையும் அதனதற்கான பல கருவிகளின் வகை போன்றவற்றையும் அதன் தொழில் முறைமைகளையும் விளக்க வந்தெழுந்த இயல்பான சொற்கள் யாவும், இயல்வழி நின்றும் இசைத் தமிழ்ப் பொருளினையே கொண்டு திகழ்வு

(பதிப்புரிமை கட்டுரைஆசிரியர்க்கே உரியது)

தால் இசைத் தமிழ்ச் சொற்கள் எனத் தனிப்படக் கூற நேரிட்டன. ஆக ஒவ்வொரு சொல்லுமே இயலையும், இசையையும் இயலிசையையும், இசையியலையும் தனித்தனிக் காட்டக்கூடியன வாகவும் விளக்கும் என்பதை நன்குணரலாம்.

இவ்விரு தன்மைகளுக்கேற்ப அம்மக்களினத்தின் உள்ளக் கிளர்ச்சியின் உணர்ச்சி, பெருகிய காலத்தும், பெருக்கிய காலத்தும் அவ்வுணர்ச்சி வகைகளை உள்ளது உள்ளவாறே தங்கள் தங்கள் உடலின் தனித்தனியுறுப்புக்களால் குறிசெய்து உள்ளத் திற்றோன்றிய எண்ண வகைகளை அஃதாவது கட்புலனால் காணப்படாதவற்றைப் பலரும் பலவாறாகக் காணத்தக்கவாறு மெய்ப்பாடுகளின் வரன்முறையில் காட்டப்படும் பல்வேறு குறிப்புக் களே நாடகத்தமிழிற்கு அடிப்படையாயின. அவற்றை விளக்க வந்த சொற்களியாவும் அத்துறைக்கு இயல்பாகவிருந்து நாடகத் தமிழ்ப் பொருளையே கொண்டுதிகழ்ந்து, நாடகத்தமிழ்ச் சொற் களாய் விளங்கி வந்துள்ளன.

இக்கருத்துடன் திகழும் நாடகத் தனித்தமிழ்ச் சொற்களும் நிரம்ப நம் பண்டைய இலக்கிய நூல்களில் உள்ளன. அவற்றுள் ஒரு சொல்லே நாம் எடுத்துக்கொண்ட வினையம் எனுஞ் சொல் லாகும்.

உலகினில் விளங்கும் உயிர் வகைகளில் சிறப்புடையதாயும் விளக்கமான பகுத்தறிவினையுடையதாயும் விளங்குவது அவ்வந் நாட்டில் வாழ்ந்து வரும் மக்களினமே என்பது கூறாமலே நன்கு விளங்கும். அத்தகைய மக்களில் ஒருவனோ ஒருத்தியோ தனது கால்கள், கைகள், (மெய், வாய், கண், மூக்கு, செவி) தலை எனும் உறுப்பால் தன் போன்ற பிறன் ஒருவனுக்கேனும் பலருக் கேனும் தன்னால் காட்டப்படும் செய்கைகளை, பொதுமுறையில் வினை எனக் கூறப்படுவதும் வழக்கு. அவ்வினை வகைகளும் பற் பலவாம்.

பயிற்சி பெற்ற ஒருவனோ ஒருத்தியோ, அன்றிப் பலரோ அரங்கேறி, பிறருக்கோ பிறவற்றிற்கோ உரிய எண்ண வகை களையும் சொற்களின் தொகைகளையும் உடலுறுப்பினது செய்கை

கிளையும் தனதாக்கிக் கொண்டு அழகுபட இசைத்தமிழோடும் இயற்றமிழோடும் ஆடிப்பாடிப் பேசிக்காட்டுகின்ற வினையுள், அதனுட் கூறுபாடுகள் யாவற்றையும் பொதுப்பட அடக்கி அம் விகுதிசேர்த்து வினையம் எனத் தமிழ்ப்பண்டையோர் வழங்கி வந்துள்ளனர்.

இத்தகைய வினையம் என்ற சொல்வினை, சென்ற நூற்றாண்டில் நம் தமிழகத்தில் வாழ்ந்திருந்த மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் மாணாக்கருள் ஒருவராய தி. க. சுப்பராயச்செட்டியாரால் பதிப்பிக்கப்பெற்ற, சிலப்பதிகாரம் புகார்க்காண்டம் எனும் நூலில் மட்டுமே தற்காலம் நாடகத் தமிழ்ப் பகுதியில் காண நேரிடுகிறது, அஃதாவது அரங்கேற்றுக் காதையுட் குறியிடப்பட்டவைகள் எனும் பகுதியிலேயே காண நேரிடுகிறது.

சிலப்பதிகார முறைப்படி நம் தமிழகத்தில் விளங்கிய தமிழில் பண்டைக்காலத்தில் நாடகத் தமிழ், இருவகையாகக் கருதப் பெறுவதும் வழக்கமாம். அவற்றுள் முதன்முதலாக வரையறுத்துக் கூறப்பெற்ற வகை, வேத்தியல் பொதுவியல் எனும் இருபிரிவாகும். இவற்றை விரிந்த நூல்களிற் காண்க என அடியார்க்கு நல்லார் கூறிப் போந்தார்.

வேத்தியல் எனும் கூத்துவகை, இயல்புக்கூத்து, ஆரியக் கூத்து; வரிக்கூத்து, வசைக்கூத்து, சாந்திக்கூத்து எனப் பலவாறாகக் கூறப்பெற்றதெனவும் அறியலாம்.

ஈண்டு இருவகைக் கூத்தாவன என எடுத்துக்கொண்டு நமது அடியார்க்கு நல்லார், சாந்தியும் விநோதமும் என்னை? எனக்கூறி,

"சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்
றாய்ந்துறவகுத்தன னகத்தியன் றனே"

எனவொரு மேற்கோளையுங்காட்டி, பின்னர் அதன் விளக்கமாக,

"சாந்திக் கூத்தே தலைவ னவிநய
மேந்தினின் றாடிய வீரிரு நடமவை
சொக்க மெய்யே யவிநய நாடக
மென்றிப் பாற்படூஉ மென்மனார் புலவர்"

என்வும் ஒரு மேற்கோள் காட்டி, நாயகன் சாந்தமாக ஆடிய கூத்துச் சாந்திக்கூத்தெனப்படும் எனக் கூறிப்போந்தார். மேலும் அவரே, அவிநயக் கூத்தாவது, நிருத்தக்கை தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் பலவகைக் கூத்து எனவும் கூறினர்.

நாடகத் தமிழிற்கு உறுப்புகளும் பலவாம். அவையும் ஒரு சிலவிடத்து வெவ்வேறாய் வரும். அவற்றுள் விலக்குறுப்புக்களும் பல. அவையிற்றைப் பொருத்தும் முறையும் பற்பல. இக்கருத்தின் வகையாவற்றையும் பொதுப்படவடக்கியே, நம் இளங்கோவேந்தரும், ஆடலாசிரியனமைதி (சிலப்பதிகார அரங்கேற்றுக் காதை) கூறுமிடத்து,

> ''இருவகைக் கூத்தி னிலக்கண மறிந்து
> பல்வகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்து''

எனத் தெளிவுபடக் கூறிப்போந்தார். இப்பகுதியினை, உரையாசிரியர் இருவரும் பொதுப்படவே விளக்கிச் செல்கின்றனர்.

விலக்குறுப்புக்கள், பதினான்கு வகைப்படும் எனக்கூறப்படுகின்றன. அவை

1. பொருள்
2. யோனி
3. விருத்தி
4. சந்தி
5. சுவை
6. சாதி
7. குறிப்பு
8. சத்துவம்
9. அவிநயம் (வினையம்)
10. சொல்
11. சொல்வகை
12. வண்ணம்
13. வரி
14. சேதம்

எனக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறான பதினான்கு சொற்களில், பொருள், சுவை, குறிப்பு, சொல், சொல்வகை, வண்ணம், வரி எனுஞ் சொற்கள் நல்ல தூய தமிழ்ச் சொற்களாகும், சந்தி, சேதம், என்ற சொற்கள் சற்று அந்த நிலையில் இருப்பவையாகும், யோனி, விருத்தி, சாதி, சத்துவம், அவிநயம், என்ற இச்சொற்கள் மிகமிகப் பிற்காலத்தனவாகும். இவற்றிற்குரிய தூய தமிழ்ச்சொற்களுமுள்ளன. முற்கூறிய, தி. க. சுப்பராயச்

செட்டியார் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற (சிலப்பதிகாரம் புகார்க்காண்டத்தில் வினயம் என்ற சொல், நன்கிருந்தும் அத னிடத்தைப் பற்றிய அவிநயம் என்ற சொல் வந்த விளக்கத்தை நமதறிவிற்குப் புலப்படுமாறு செய்கின்றது. அதனை விளக்க எழுந்த இக்கட்டுரைக் கருத்தும் நம் செந்தமிழ் வாயிலாக அன்பரறிவிற் பரவக்கூடும்.)

மேலே கூறிய விலக்குறுப்புக்களில் ஐந்தாவதாகிய சுவை ஒன்பது வகைப்படும். அவை,

1. வீரச்சுவை 2. அச்சச்சுவை
3. இழிப்புச் சுவை 4. அற்புதச்சுவை
5. இன்பச்சுவை 6. அவலச்சுவை
7. நகைச்சுவை 8. நடுவுநிலைச்சுவை
9. உருத்திரச்சுவை எனப்படும்.

இவ்வொன்பது சுவைகளையும் ஆடல் பயின்ற ஒருவனோ, ஒருத்தியோ, பலரோ, ஒவ்வொன்றனையும் தனித்தனிக் காட்டி வினை செய்வதை, யாம் முற்கூறியாங்கு வினை எனுஞ் சொல் லோடு அம் விகுதி சேர்த்து *வினயம்* எனக்கொண்டு, நம் பழந் தமிழர்களால்,

1. வீரச்சுவை வினயம் 2. பயச்சுவை வினயம்
3. இழிப்புச்சுவை வினயம் 4. அற்புதச்சுவை வினயம்
5. இன்பச்சுவை வினயம் 6. அவலச்சுவை வினயம்
7. நகைச்சுவை வினயம் 8. நடுவுநிலைச்சுவை வினயம்
9. உருத்திரச்சுவை வினயம் என நன்கு விதந்தோதப் பெற்றன. இவ்வாறே தி. க. சுப்பராய செட்டியார் அவர்கள் பதிப்பில் இருக்கின்றன.

தமிழகத்தில் நாளடைவில் நன்கு பாதுகாக்கப்பெற்ற பழந் தமிழிலக்கியங்களில் நம் சிலப்பதிகாரமும் ஒன்றே யன்றோ! சிலப்பதிகார ஏடுகள் சிதைந்த காலத்துப் புதிய ஏடுகள் எழுதிப் பாதுகாப்போரால் வினயம் என்ற சொல் காலவகையில் னை னகரமாகி அஃதும் நாள் செல்லச் செல்ல, நகரமாகி வினயம் எனவும் விநயம் எனவும் திரிபு பெற்றிருக்கக்கூடும்.

இத்திரிபும், கால வகையில் எழுத எழுத அஃதாவது வீரச் சுவை வினையம், என்பது வீரச்சுவை விநயம் ஆயினபிறகு, அத் துணைப் பொருள் பொருந்தியதாகக் காணப்படாதவிடத்தும், வடமொழி அபிநயம் அடிக்கடிச் செவியில் பட்டுக்கொண்டிருந்த காலத்தும், மெல்ல வீரச்சுவை யவிநய மாயிற்று எனவும் கூற லாம். எழுத்தும் கருத்தும் இவ்வாறு வேறுன்றவே வட மொழி அபிநயந்தான் தமிழில் அவிநயமாயிற்றெனக் கருத இட மேற்பட்டது. நல்ல வேளையாக சில ஏடுகளில் (சிலப்பதிகாரம்) பண்டைய தூய தமிழ்ச்சொல்லாய வினையம் எப்படியோ இருந்துகொண்டு தனது பழைமையான எழிலுருவினைக்காட்டிக் கொண்டேயிருந்தமையால் அவ்வேடுகள் தி. க. சுப்பராயச்செட் டியார் அவர்களிடம் கிடைத்து உள்ளவாறே அச்சுவாகனமேறி விட்டன.

இனித் திரிபுபட்ட நிலையில் ஒன்பான் சுவைகளையும் எழுதி யறியலாம்.

1. வீரச்சுவை யவிநயம் 2. பயச்சுவை யவிநயம்
3. இழிப்புச்சுவை யவிநயம் 4. அற்புதச்சுவை யவிநயம்
5. இன்பச்சுவை யவிநயம் 6. அவலச்சுவை யவிநயம்
7. நகைச்சுவை யவிநயம் 8. நடுவுநிலைச்சுவை யவிநயம்
9. உருத்திரச்சுவை யவிநயம் என்பனவாம்.

இவை யாவும் அபிநயத்தில் மனம் ஒன்றிய காலத்து எழுதப் பட்டவை யென்பதை நன்கு உணரலாம். இவை இவ்வாறாக இச் சுவைகளைக் கூறும் மேற்கோள் நூற்பாக்களும் திரிபு கொள்ள லாயின. அவற்றையும் சுப்பராயச்செட்டியார் பதிப்பித்த முறை யினை முன்னெழுதி, பின்னதைப் பின்னெழுதிக் கட்டுரையை முடிவு செய்வாம்.

வினைய நூற்பாக்கள்

க. வீரச்சுவை — (வீரச்சுவை வினையம்)

"வீரச்சுவை வினையம் விளம்புங் காலை
முரிந்த புருவமுஞ் செவந்த கண்ணும்
பிடித்த வாளுங் கடித்த வெயிறும்

மடித்த வுதடுஞ் சுருட்டிய நுதலும்
திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை
எண்ணெல் செல்லா விகழ்ச்சியும் பிறவும்
நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே"

என்ற இந்நூற்பா "வீரச்சுவை யவிநயம் விளம்புங்காலை.......
.....................நன்குணந்தோரே" என மாறுபாடு அடைந்து விட்டது. சேவந்த என்பது சிவந்த எனவுமாயிற்று.

உ. அச்சச்சுவை (பயச்சுவை வினையம்)

"அச்ச வினையம் ஆயுங் காலை
ஒடுங்கிய வுடம்பு நடுங்கிய நிலையும்
மலங்கிய கண்ணுங் கலங்கிய வுள்ளமுங்
கரந்துவர லுடைமையுங் கையெதிர் மறுத்தலும்
பரந்த நோக்கமு மிதன்பண் பினவே"

என, பாடமாறுபாடுடையதாகத் தோன்றுகின்றது.

௩. இழிப்புச்சுவை (இழிப்பின் வினையம்)

"இழிப்பின் வினைய மியம்புங் காலை
இடுங்கிய கண்ணு மெயிறுபுறம் போதலும்
ஒடுங்கிய முகமு முகுற்றுக் காலும்
சோர்ந்த யாக்கையுஞ் சொன்னிரம் பாமையும்
நேர்ந்தன பிறவும் நெறியறிந் தோரே"

எனும் இந்நூற்பா,

இழிப்பி னவிநய மியம்புங்காலை ....
.... நெறியந்தோரே எனும் அளவில் மாறுபாடுற்றது, பிறவும் என்ற சொல் என்ப எனவும் மாறிற்று.

[தொடரும்]

சங்கச் செய்திகள் :-

நிகழும் 1959 மார்ச், ஏப்ரல் திங்களில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற வித்துவான் நுழைவு, முதனிலை, இறுதிநிலை ஆகிய தேர்வுகளில் கலந்து கொண்ட மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் 92% தேறியுள்ளார்கள்.

வகுப்பு	சென்றவர்கள்	தேறியுள்ளவர்கள்	நூற்றுக்கு
நுழைவு.	23	21	96
முதனிலை.	23	முதற்தகுதி - 1 2-ஆம்தகுதி - 7 3-ஆம்தகுதி - 13 21	92
இறுதிநிலை.	4	3	75

இறுதி நிலை தேறியவர்கள்:

2-ஆம் தகுதி: 1. கரு. மாணிக்கவாசகம்

3-ஆம் தகுதி: 1. ஆர். நாகலிங்கம்
2. மு. உலகநாதன்

மதுரைத் தமிழ்ச்சங்கம்
மதுரை.

செயலாளர்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4:	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கஞ்நூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	8	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
3?.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.